**நாவலபிட்டிய நகர சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்நிதிக்கூற்றுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2018 ஜுலை 10 திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாவலபிட்டிய நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபளிக்கிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு கடன்படுனர் கூட்டுப்பெறுமதி ரூபா 2,152,478 இனால் கூடுதலாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் மோடார் வாகன கொள்வனவு ரூபா 894,959 ஆன போதும், அது ரூபா 1,443,538 என ரூபா 548,579 யினால் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்காக முத்திரை கட்டணம் ரூபா 6,860,670 கிடைத்த போதும், மீளாய்வாண்டிற்காக ரூபா 2,500,000 மாத்திரமே ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டை விட ரூபா 4,360,670 குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நீதி மன்ற தண்டம் ரூபா 281,789 அங்கீகாரமின்றி கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு வேலை பண்டக கணக்கு மீதி ரூபா 693,452 ஆன போதும் அது ரூபா 93,452 என ரூபா 600,000 யினால் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் சுகாதார சேவை கருத்திட்டத்தின் மூலதன அன்பளிப்பு மற்றும் மூலதன செலவு ரூபா 100,000 வருமான செலவு கணக்கிற்கு எடுக்கப்படவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 10,392,394 ஆன 3 கணக்கு மீதிகளிற்குறிய மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிற்கிடையில் ரூபா 4,358,165 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கி செலுத்த வேண்டிய 3 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 10,442,246 ஆனது. அது தொடர்பான கால பகுப்பாய்வின் படி ஒர் ஆண்டை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்

தொகை ரூபா 2,093,317 மற்றும் 5 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 7,765,000 ஆகவிருந்து.

(ii) பொறியியல் செயற்பாடுகள் தொடர்பாக மத்திய மதியுரைச் சேவைக்கு 2014 முதல் 2016 வரையான காலத்திற்கு இயற்கை பசளைக்காக வழங்கப்பட்ட ரூபா 878,955 ஆன தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய 5 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 21,350,519 ஆனது. அவை தொடர்பான கால பகுப்பாய்வின் பிரகாரம் ஒர் ஆண்டை விஞ்சி இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,844,241 மற்றும் 5 வருடங்களை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,523,725 ஆகவிருந்து.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 450,602 ஆன 02 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தன.

**1.3.5 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 2015 ஜூன் 19 ஆம் திகதிய 1919-81 ஆம் இலக்க கொண்ட அதிவிஷேட வர்த்தமானி | 567,802 | சபை அதிகார எல்லையில் காட்சிப்படுத்தப்படும் அனைத்து விளம்பர பலகைகளிலிருந்தும் கட்டணம் அறவிடுவதற்காக விதிகள் அமுல்படுத்தப்பட்டு 138 விளம்பர பலகைகளிலிருந்து கட்டணம் அறவிடப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதி பிரமாணம் 104 | 44,190 | கழிவு பொருள் அகற்றும் வேலையில் ஈடுபடுத்தியிருந்த டெக்டர் வண்டியொன்று 2017 ஏப்ரில் 22 திகதி பாதையிலிருந்து விலகி விபத்துக்குள்ளானது தொடர்பாக பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 371 (2) (ஆ) | 664,381 | ஆண்டு 1 முதல் 7 வரையான காலத்தினுள் வழங்கப்பட்டிருந்த முற்பணத்தினை 2017 திசெம்பர் 15 திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் பதவிநிலை அல்லாத அலுவலர்களுக்கும் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதி பிரமாணம் 571 (3) | 1,506,112 | ஆண்டு 2 முதல் 6 வரையான காலத்திற்குறிய 108 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (iv) | நிதி பிரமாணம் 751 | 1,245,131 | பெறப்படும் அனைத்து பண்டங்களும் உடனடியாக பண்டக பதிவேட்டில் பதியப்பட வேண்டிய போதும், 2015/ 2016/ 2017 ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட 485 இயற்கை பசளை கூடைகள் பதிவேடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/3 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் 10 பந்தி | | கடை அறைகளை உப குத்தகை வழங்கக் கூடாத போதும் சிறப்பங்காடி மற்றும் பஸ் வண்டி தரிப்பிட அருகாமை கடையறைகள் முதல் குத்தகை காரர்களினால் உப குத்தகை வழங்கி ரூபா 10,500 முதல் ரூபா 30,000 வரை வாடகை அறவிடப்படடிருந்தன. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டி கோவை 2006 | | |
| (i) | 3.4 | 115,000 | பெறுகைகள் விதி முறைகளுக்கு மாற்றமாக நடைபாதை பழுதுபார்பதற்காக 3500 துண்டக்கற்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ii) | 3.4 (ஈ) | 3,000,000 | பெறுகைகள் விதி முறைகளுக்கு மாற்றமாக 4 நிர்மாண ஒப்பந்தங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆணடிற்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 15,890,776 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 26,918,138 ஆனது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் குத்தகை வாடகை | 14,465,399 | 16,637,619 | 13,191,497 | 12,460,213 | 13,713,230 | 14,465,399 | 13,825,480 | 14,842,543 |
| வாடகை | 19,778,798 | 18,316,311 | 17,227,508 | 2,661,611 | 16,046,480 | 19,778,798 | 17,134,681 | 2,420,348 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,573,720 | 1,558,479 | 1,558,479 | - | 1,196,000 | 1,573,720 | 1,593,010 | - |
| ஏனைய வருமானம் | 10,486,880 | 12,849,030 | 16,172,072 | 2,680,747 | 11,875,000 | 10,486,880 | 18,417,745 | 1,914,665 |
| | 46,304,797 | 49,361,439 | 48,149,556 | 17,802,571 | 42,830,710 | 46,304,797 | 50,970,916 | 19,177,556 |

### 2.2.2 வீத வரி மற்றும் வாடகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 13,973,462 ஆன நிலுவை மீதி ஒன்று நிலவிய போதும் ஆண்டினுள் அவற்றிலிருந்து ரூபா 5,213,895 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை வீத வரி மற்றும் குத்தகை மீதி ரூபா 11,519,631 ஆனது.

### 2.2.3 வாடகை

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 2,420,349 நிலுவையான வாடகை மீதியொன்று நிலவிய போதும், ஆண்டினுள் அவற்றிலிருந்து ரூபா 635,167 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தன.

### 2.2.4 ஏனைய வருமானம்

**(அ) வாகன வாடகை வருமானம்**

மீளாய்வாணடு ஆரம்ப திகதியில் ரூபா 2,420,349 ஆன நிலுவை மீதியொன்று நிலவியதுடன், ஆண்டினுள் அதிலிருந்து ரூபா 635,167 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை ரூபா 2,661,613 ஆனது.

**(ஆ) பசளை விற்பனை வருமானம்**

மீளாய்வாண்டு இறுதியில் பெறப்பட வேண்டிய பசளை விற்பனை வருமானம் ரூபா 878,955 ஆனதுடன், அது ஆண்டு 1 இற்கும் 6 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய அறவிடப்பட வேண்டிய மீதியாகும்.

**(இ) நீர் கட்டனம்**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 869,082 ஆன நிலுவை மீதியிலிருந்து ஆண்டினுள் ரூபா 36,800 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன.

(ஈ) நகரத்தில் முற்சக்கர வண்டி தரிப்பிட கட்டணத்தை முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காததுடன், 2017 நவம்பர் 30 ஆம் திகதி வரையும் அங்கீகரிக்கப்பட்ட 19 முற்சக்கர வண்டி தரிப்பிடங்களில் ரூபா 1,617,110 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தன.

### 2.2.5 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய நீதிமன்ற தண்டபணம் ரூபா 74,167 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 2,500,000 ஆனது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை அதிகார சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் பொது நலன், வசதிகள் மற்றும் நலன் புரி போன்ற சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வரமாறு குறிப்பிடப்படுகின்றன.

#### (அ) துணைச் சட்டம்

நகர சபை அதிகார சட்டத்தின் 157 பிரிவின் கீழ் 15 பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ள துணைச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டிய போதும் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் 3 விடயங்களிற்கு மாத்திரம் துணைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

#### (ஆ) செயல் நடவடிக்கை திட்டம்

அமுல்படுத்தப்பட்ட துணைச் சட்டத்தின் படி சபை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த ஓர் செயற்பாட்டிற்கேனும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) ஒதுக்கீடு வழங்கப்படாமை

தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் சபை மூலம் மேற்கொள்ள வேண்டியிருந்த 80 செயற்பாடுகளில் 75 இற்கு மாத்திரமே வருடாந்த வரவு செலவு திட்டம் மூலம் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக 05 செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமலிருந்தன.

#### (ஈ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை

சேயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடொன்றை மேற்கொள்ள ரூபா 1,000,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினை (out put) அடைந்து கொள்ளவில்லை. விபரம் கீழ் குறிப்பிடப்படுகின்றன.

| செயற்பாடு | மேற்கொள்ளப்பட்ட அளவின் பெறுமதி | அவதானங்கள் |
| --- | --- | --- |
| ----------------- | ------------------------------ | ------------------------ |
| | ரூபா | |
| பழைய நகர சபை கட்டிடம் அமைந்துள்ள இடத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட வியாபார கட்டிடத்தொகுதி. | 1,000,000 | அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டம் ஒன்றல்லாத மற்றும் வருடாந்த மேலும் கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்படாத கருத்திட்டமொன்றுக்காக கட்டிடத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கட்டடக் கலைஞர் ஒருவருக்கு பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. |

**(உ) செயற்பாடுகளை மேற்கொள்வதன் தாமதம்**

பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்பாடு | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2017 திசம்பர் 31 திகதிக்கு செலவு | தாமதத்திற்கான காரணம் |
| --- | --- | --- | --- | --- |
| ---------------- | ----------------- | -------------------------- | ------------------ | --------------------------- |
| | ரூபா | | ரூபா | |
| பவ்வாகம சுடுகாடு சுற்றிவர வேலி இடல். | 500,000 | 2017.11.08 | 325,089 | எல்லை பிரச்சினை காரணமாக பூர்த்தி செய்யப்படாமை. |
| வோகன்ஸ் பார்க் இலிருந்து தொலஸ்பாகை பாதை வரையான மேன் பாலத்தை பழுதுபார்த்தல். | 1,000,000 | - | - | மதிப்பீட்டில் குறிப்பிடப்படும் அளவை விட மேன் பாலத்தின் துறுப்பிடிப்பு காணப்படுவதனால் குறித்த வேலையை மேற்கொள்ள முடியாது என ஒப்பந்தக்காரரினால் அறிவிக்கப்பட்டிருந்தமை. |

**(ஊ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

2015 சனவரி 21 ஆம் திகதி கழிவுப் பொருட்கள் முகாமைக்காக கிடைத்திருந்த ரூபா 50,000 ஆன பணத்தை 2017 திசெம்பர் மாதம் வரையும் வைப்பு கணக்கில் வைத்துக் கொண்டிருந்தமையினால் குறித்த செயலை மேற்கொள்ள பொருப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(எ) நிலையான அபிவிருத்தி இலக்குகள்**

சபையினால் நிலையான அபிவிருத்தி நோக்கின் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்துகொள்ள மற்றும் முன்னேற்றத்தினை அறவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) ஜயதிலக விளையாட்டரங்கின் சிற்றுண்டிசாலை கீழ் மாடியில் சபை அனுமதியின்றி குத்தகைக்காரரினால் சிறிய விழா சாலையொன்றும் 02 சேவைகள் அறைகளும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இதற்காக மதிப்பீடு அளவீட்டுப்பத்திரம் மற்றும் விலை பட்டியல் தயாரிக்கப்படாமல் ரூபா 958,095 செலவிடப்பட்டுள்ளதாக தொழிநுட்ப அதிகாரியினால்

செயலாளருக்கு அறிவித்திருந்த போதும், கைச்சாதிடப்பட்டிருந்த குத்தகை ஒப்பந்தத்திற்கு மாற்றமாக அனுமதியற்ற நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக ஒப்பந்தம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சுகாதார ஊழியர் ஒருவரினால் செலுத்தப்பட்ட சபையின் டெக்டர் வண்டியொன்று 2017 மார்ச் 22 திகதி விபத்திற்குள்ளானதில் பாதிக்கப்பட்ட தரப்பினரால் ரூபா 300,000 இழப்பீடு கோரியிருந்ததுடன், நட்டத்தை மதிப்பிட்டு முன் ஏற்பாடுகளை மேற்கொள்ள சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2015 செப்டெம்பர் 09 திகதி கிடைத்திருந்த ஊழியர் ஒருவருக்கு சொந்தமான ரூபா 23,259 ஆன விதவை அநாதைகள் பணமொன்று 2017 திசெம்பர் மாதம் வரை வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) சிறப்பங்காடி கட்டிடத்தொகுதியின் இலக்கம் 173 கொண்ட சிறிய சினிமா சாலையை டென்டர் நடைமுறைகளுக்கு மாற்றமாக மற்றும் நகர சபை அதிகாரச்சட்டத்தின் இலக்கம் 36 (உ) II பந்திக்கு இணங்காது தனியார் தரப்பினர் ஒருவருக்கு 2011 ஆகஸ்ட் 23 திகதி நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பந்தி 05 பிரகாரம் பிணை முறி பெறப்படாததுடன், 2017 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 5,000,000 ஆன குத்தகைப் பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 3.3 மனித வள முகாமை

**(அ) ஊழியர் பற்றாக்குறை மற்றும் மிகை**

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான ஆளணிக்கிடையில் 1 ஊழியர் மிகையும் 45 பற்றாக்குறைகளும் காணப்பட்டது.

**(ஆ) ஊழியர் கடன்**

01 ஆண்டு முதல் 29 ஆண்டு கால எல்லைக்குள் இடமாற்றம் பெற்றுச் சென்ற 06 அலுவலர்களிடமிருந்து சேவையை விட்டுச் சென்ற 11 அலுவலர்களிடமிருந்து மற்றும் ஓய்வு பெற்ற 12 அலுவலர்களிடமிருந்து நிலுவை ஊழியர் கடன் ரூபா 768,396 தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) 2008 பெப்ரவரி 25 திகதிய மாதாந்த சபை தீர்மானத்தின் படி நகர சபைக்கு சொந்தமான நகர மத்தியில் காணப்படும் வியாபார கட்டிடத்தினை மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளாமல், முற்பணம் அறவிடப்படாமல் மற்றும் ரூபா 225,000 ஆன குறைந்த கேள்வி மணுவிற்கு டென்டர் கோரப்பட்டு ரூபா 231,000 இற்கு தனியார் கம்பனி ஒன்றிற்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தது. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை வாடகை மதிப்பிடப்பட்டு அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படாமல் குறைந்த சதவீதத்தினால் அதிகரித்து 2008 முதல் 2033 வரை 25 வருடங்களுக்கு, சபைக்கு பாதகம் ஏற்படக்கூடிய குத்தகை ஒப்பந்தத்தின் மீது குத்தகை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சிறப்பங்காடி கட்டிடத்தொகுதியின் கடையறைகள் மற்றும் 9 வீடுகளை குத்தகைக்கு வழங்கியதற்கான முற்பணம் ரூபா 6,884,724 நிலுவையாக இருந்ததுடன், இப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) சறப்பங்காடி கட்டிடத்தொகுதியின் சேவகர் அறையினை குத்தகைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தத்தின் 06 ஆவது பந்தி பிரகாரம் இவ்வறையை சேவகர் அறையாக மாத்திரம் பயன்படுத்த வேண்டிய போதிலும், 166, 168 மற்றும் 144 ஆகிய அறைகளில் வியாபாரம் செய்யப்பட்டிருந்தன.

(ஈ) சபைக்கு சொந்தமான ஜயதிலக விளையாட்டரங்கின் சிற்றுண்டிசாலை மாத்திரம் குத்தகை ஒப்பந்தத்தினூடாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகைகாரரினால் அக் கட்டிட முன்பக்க நிலத்தில் நீர் பூங்காவொன்று நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன், அதற்காக பற்றுச்சீட்டுகளின் 25 சதவீத வருமானத்தை மாத்திரம் சபைக்கு வழங்கப்பட்டமையால் சபைக்கு சொந்தமான நிலத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்த இடமளிக்கப்பட்டிந்தது.

(உ) 2015 பெப்ரவரி மாதத்தில் ரூபா 281,500 செலுத்தி பெறப்பட்ட 100 கொன்கிரீட் இயற்கை பசளை பாத்திரங்கள் தொடர்பான எவ்விதத் தகவல்களும் கணக்காயிவிற்கு சமர்ப்பிக்கப்படாததுடன், 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் சபைக்கு கிடைத்திருந்த 385 பிலாஸ்டிக் இயற்கை பசளை பாத்திரங்களில் 185 சபை வளவில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்ததுடன், 25 பாத்திரங்கள் சபைக்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத தனி நபர் ஒருவரின் வீட்டில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத பாத்திரங்களின் எண்ணிக்கை 154 ஆனது.

(ஊ) வீதவரி 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதும், 2009 ஆம் ஆண்டி வீதவரி மதிப்பீட்டின் பிரகாரம் 2017 ஆண்டு வரை விதவரி அறவிடப்பட்டதன் காரணமாக பெறுமளவு வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தமை மற்றும் புதிய வீதவரி அலகுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சபையின் சொத்துக்களை உரிய டென்டர் ஒழுங்கு விதிகளை பின்பற்றாமல் மற்றும் முற்பணம் அறவிடப்படாமல் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன.

(ஏ) செயற் கூற்றின் பிரகாரம் சபை அதிகார எல்லையில் சுகாதார சேவையை வினைத்திரனுடன் முகாமை செய்து முன்மாதிரியான பிரதேசத்தை உருவாக்க வேண்டிய போதும், பொது மக்களுக்கு காணப்படும் சுகாதார பிரச்சினைகள் தொடர்பாக சபைக்கு கிடைத்திருந்த 6 முறைப்பாடுகள் மற்றும் வேறு 3 முறைப்பாடுகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) வீதி விலக்குகள் தொடர்பான 2017 நவம்பர் மற்றும் திசம்பர் மாதங்களில் கிடைக்கப்பெற்ற 16 முறைப்பாடுகள் தொடர்பாக 2017 திசெம்பர் 15 திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஒ) சபைக்கு சொந்தமான அங்காடி கட்டிடத்தொகுதியின் குத்தகை வாடகை 05 வருடங்களுக்கு ஒரு முறை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டிய போதும், மாதாந்த குத்தகை வாடகை மீள் பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமை

#### 3.5.1 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானம் பெறப்படாமை

வாடகை செலுத்தப்படாமைக்காக முத்திரையிடப்பட்ட 2 வீடுகள் மற்றும் 8 கடையறைகள் 02 மாதங்கள் முதல் 16 மாதங்களுக்கு இடையிலான காலம் வரை சுவீகரிக்கப்படடு மீள் குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்காமையினால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

#### 3.5.2 செயலற்ற/ குறைபயன்பாட்டு சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாயவாண்டு இறுதியில் ரூபா 2,505,000 பெறுமதியான 02 சொத்துக்கள் செயலற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் நிலவின.

(ஆ) கார் வண்டி ஒன்று ரூபா 478,186 செலவில் திருத்தப்பட்டிருந்த போதும், 2017 திசெம்பர் 15 திகதி வரையும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காது சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.6 வெளிப்படையான முறைகேடுகள்

சபைக்கு சொந்தமான கொத்மலை பாதையில் இலக்கம் 153 கொண்ட கட்டிடம் நகரசபை அதிகார சட்டத்தின் 36 (இ) II பிரிவிற்கமைய விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாமல் மற்றும் முறையான டென்டர் நடைமுறைகளுக்கு மாற்றமாக நீண்டகாலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அறவிட வேண்டிய முற்பணமும் (Key money) அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், நொதாரிஸ் ஒருவர் முன்னிலையில் 2015 மே 17 ஆம் திகதி எழுதப்பட்டு ஒப்படைக்கும் வாக்குறுதி ஒப்பந்தத்தின் மூலம்

குத்தகைக்காரர்களினால் தவிசாளருக்கு ரூபா 20 இலட்சம் பணம் முற்பணமாக (Key money) வழங்கியுள்ளமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

**3.7 பெறுகைகள்**

**3.7.1 பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டில் ரூபா 5,064,699 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7.2 வழங்கள் மற்றும் சேவைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) கெப் வண்டியொன்று 2015 ஆண்டில் அம்பதென்ன இயந்திர பொறியியலாளர் நிறுவனத்தினால் ரூபா 642,800 ஆன மதிப்பீட்டிற்கு பழுதுபார்கப்பட்ட போதும், திருத்த வேலைகள் ஒழுற்காக செய்யப்பட்டிருக்கவில்லை. இவ்வண்டியை மீண்டும் பழுதுபார்ப்பதற்காக அந் நிறுவனத்திற்கே அனுப்பப்பட்ட போதும், இரண்டாம் முறை திருத்தத்தின் பின்னர் இயந்திர பொறியியலாளர் ஒருவரினால் அல்லது மோட்டர் வாகன பரிசோதகர் ஒருவரினால் வாகனத்தை பரீட்சித்து அறிக்கை பெறப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.

(ஆ) 20000 பார்குறியீட்டு பட்டி மற்றும் 02 பார்குறியீட்டு பிரசுர காபன்களிற்காக தனியார் நிறுவனமொன்று ரூபா 27,760 விலை மனு முன்வைத்திருந்த போதும், அவ்விலை மறுக்கப்பட்டு ரூபா 35,600 யிற்கு கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 7,840 ஆன இழப்பு அரசிற்கு ஏற்பட்டிருந்தது. இங்கு குறைந்தபட்ச விலை மறுக்கப்பட்டமைக்கான காரணம் தெளிவாகவில்லை.

(இ) 5 கணனிகளை கொள்வனவு செய்கையில் ரூபா 95,000 ஆன குறைந்த பட்ச விலையினை மறுத்து ரூபா 101,000 வீதம் செலுத்தி கொள்வனவு செய்தமையினால் ரூபா 30,000 ஆன இழப்பு ஏற்பட்டிருந்தது.

(ஈ) சுகாதாரப் பிரிவிற்காக ரூபா 2,750 வீதம் 50 பாதுகாப்பு சப்பாத்துக்கள் ரூபா 137,500 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பெறுகையின் போத அச் சப்பாத்துக்களுக்கான ஆகக்குறைந்த விலையான ரூபா 1,950 தள்ளுப்படி செய்யப்பட்டதனால் ரூபா 40,000 ஆன இழப்பு ஏற்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டினுள் வருமான மற்றும் செலவு விடயங்களுக்கு இடையில், ஒதுக்கீடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதீட்டிற்கும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவிற்குமிடையில், குறிப்பிடக்கூடிய முரனொன்று அவதானிக்கப்பட்டதனால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்படாததுடன், இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 53 செலவு விடயங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 6,451,200 ஆன ஒதுக்கீட்டிலிருந்து எவ்வித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 54 செலவு விடயங்களில் தேறிய ஒதுக்கீடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையில் 7 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வீச்சலவான முரன்கள் நிலவின.

(இ) 2 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 60,000 ஆன வருமானத்திலிருந்து எவ்வித உழைப்பும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) 19 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையில் 10 சதவீதம் முதல் 99 சதவீத வீச்சலவான முரன்கள் நிலவின.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | (i) சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மை ஆய்வு செய்யப்படாமை. |
| | (ii) சபைக்கு சொந்தமான காணிகளை முறையான அங்கீகாரமின்றி ஒப்படைத்தல். |
| (ஆ) கணக்கீடு | (i) சபைக்கு சொந்தமான எல்லா சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கிடாமை. |
| | (ii) கடன்படுனர் மீதி குறைத்து கணக்கிடப்படல். |
| | (iii) கடன் வட்டி குறைத்து கணக்கிடப்படல். |
| (இ) காசு மற்றும் வங்கி நடவடிக்கைகள் | (i) வைப்பு செய்யப்பட்ட போதும் மாற்றப்படாத காசோலைகள் காணப்படுகின்றமை. |
| | (ii) மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஈ) வாகன கட்டுப்பாடு | (i) வாகனங்களின் எரிபொருள் விரயம் பரீட்சிக்கப்படாமை. |
| | (ii) பாவணையிலிருந்து ஒதுக்கப்ட்ட வாகனங்கள் பராதீனம் செய்யப்படாமை. |
| (உ) வருமானக் கட்டுப்பாடு | (i) காலத்திற்கேற்ப வீதவரி குத்தகை மதிப்பிடப்படாமை. |
| | (ii) நிலுவை வருமானம் அறவிடப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை. |
| (ஊ) கடன்படுனர் மற்றும் கடன்கொடனர் | (i) கடன்படுனர் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) வேலைகள் கடன்கொடுனர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) ஓப்பந்த நிர்வாகம் | (i) பெறுகைகளுக்காக போதிய காலமொன்று வழங்கப்படாமை. . |

(ii) கருத்திட்டங்களை செய்வதில் தாமதமொன்று காணப்பட்டமை.

(iii) சுற்றுநிருபங்களுக்கு மாற்றமாக ஒப்பந்தங்கள் வழங்கப்படாமை.